## 29-09-2011 அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு
## தலைப்பு : மலையகத் தொழிற்சங்கங்களும் மாற்றுத் தொழிற்சங்கமொன்றின் தேவையும்
## தொடக்கவுரையாடல் : மார்க்ஸ் பிரபாஹர்

மலையக தொழிலாளர்களைப் பொறுத்தமட்டில் கலை, கலாசார மற்றும் பண்பாட்டியல் கூறுகள் போன்றே தொழிற்சங்கச் செயற்பாடும் அவர்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந்த, இன்றியமையாத ஒன்றாய் இருந்து வருகிறது. அவ்வப்போது ஏறி எகிறும் விலைவாசிகளை ஜீரனித்துக்கொள்ள முடியாது, அன்றாடத் தேவைகளுக்காய் வாங்கும் அத்தியாவசிய (அரிசி, பருப்பு, சீனி மற்றும் இதர) பொருட்களின் அளவுகளை குறைத்துக் கொண்டாலும் தொழிற்சங்கத்துக்கான சந்தாப் பணத்தை மட்டும் சதமேனும் குறையாது செலுத்திவிடுவது அவர்களின் தொழிற்சங்கஞ்சார் ஈடுபாட்டையும் விசுவாசத்தையும் வெளிக்காட்டுகிறது. இதற்கான காரணம் என்னவெனில் தொழிற்சங்கம் என்பது இல்லாவிடில் தமக்குக் கிடைக்கவேண்டிய அனைத்து உரிமைகளும் கிடைக்காமல் போய்விடும் என்றதொரு நம்பிக்கையாகும். ஆனால் இவர்களுக்குக் கிடைக்கவேண்டிய ஏராளமான உரிமைகளை பெற்றுக் கொடுக்காது மிகவும் சூட்சுமமாக அவற்றை மறுத்து தமது தரகுக் கூலியை பெற்றுக்கொண்டு நிகழ்த்தப்பட்ட காட்டிக்கொடுப்புகள் அவர்கள் அறியாததே.

நடைமுறை நாட்களில் மலையகத்தில் மட்டும் ஏறத்தாழ நாற்பது தொழிற்சங்கங்கள் இயங்குவதாக அறிகிறோம். என்றபோதிலும் அவையனைத்துமே தொழிற்சங்கத்தின் அடிப்படை நோக்கங்களையும் கொள்கைகளையும் புறக்கணித்துவிட்டு தமக்கேயுரிய முதலாளித்துவ குணாம்சங்களை கட்டிக்காத்தவாறு வருமானம் ஈட்டும் நிறுவனங்களாக மாற்றம் பெற்றுள்ளன. இந்த சாதகமான நிலைமையை நன்கு விளங்கிக்கொண்ட தோட்ட உரிமையாளர்கள் சம்மேளனம் இலட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கு அன்றாட வேதனத்தைக் கூட்டிக்கொடுத்து இலாபத்தை இழப்பதைவிட சம்பள ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுகின்ற குறிப்பிட்ட சில தொழிற்சங்க தலைமைகளுடன் சேர்ந்து இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை தமக்கு ஏற்புடைய தொகையொன்றைக் கொடுப்பதன் மூலம் சம்பள பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவருகிறது. இது தவிர குறித்த தொழிற்சங்க தலைமைகளுக்கு தாம் வகையிலான சந்தோசங்களையும் பெற்றுக் கொடுக்கிறது. இந்த அநியாயங்கள் போதாதென்று தொழிற்சங்கங்கள் போராட்டங்களை முன்னெடுக்க முடியாதென்ற சட்டத்தை மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அரசாங்கமும் அமுல்படுத்தி வருகின்றது.

தொழிலாளர் என்போர் எல்லா காலத்திலும் இந்த நாட்டின் வருமானத்தை தீர்மானிக்கின்ற சக்தியாக இருந்து வந்திருக்கின்றனர் என்பது எவராலும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாத உண்மையாகும். ஆகக்குறைந்தது இந்த உழைக்கும் வர்க்கத்தினருக்கு உட்கட்டமைப்பு வசதிகளை செய்துகொடுப்பதன் மூலம் அவர்களின் இருப்பையும் தொடர்ச்சியான உழைப்பையும் பெற்றுக்கொள்ள இயலுமானதாக இருக்கும் என்ற அறிவுகூட இவர்களின் உழைப்பை உறிஞ்சி உடம்பு வளர்த்து பெருத்துக்கிடக்கும் முதலாளித்துவ முதலைகளுக்கு விளங்குவதில்லை. இந்த வேளையில்தான் மலையகத் தொழிலாளர்களின் நலனுக்காக தொழிற்சங்கமொன்றைத் தொடங்கி உண்மையாகவே அவர்களின் உரிமைகளுக்காக குரல் கொடுத்த கோ. நடேசய்யரை நினைவுகொள்ள வேண்டியிருக்கிறது.

முதன் முதலாக தொழிலாளர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான முயற்சிகளை கோ.நடேசய்யரே மேற்கொண்டதாக அறிகிறோம்;. 1931ம் ஆண்டு தொழிற்சங்க செயற்பாடுகளை முன்னெடுத்த இவர் தோட்ட உரிமையாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் பாரிய தலையிடியாக மாறியிருந்தார். அதுவரை தொழிலாளர்களுக்கான வேதனத்தைக்கூட ஒழுங்காக வழங்காத தோட்ட உரிமையாளர்கள் கோ.நடேசய்யரின் தொழிலாளர் நலன்சார் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதன் பின்னர் தொழிலாளர்களின் சில முக்கிய தேவைகளை பூர்த்தி செய்யவேண்டிய கடப்பாட்டுக்குள் தள்ளப்பட்டனர். தொழிலாளர்களை சுரண்டியும் ஏமாற்றியும் இலாபமீட்டிய முதலாளிகளுக்கும் தோட்ட உரிமையாளர்களும் இது மிகவும் கஸ்டமாக இருந்தது. தங்களின் முதலாளிய தர்மம் சிதைந்து போவதை தாளாத அவர்கள் கோ.நடேசய்யருக்கும் தொழிலாளர்களுக்குமிடையே முரண்பாட்டை ஏற்படுத்தி அவரை தொழிலாளர்களிடமிருந்து பிரிக்கும் நரித்தனச் செயற்பாடுகளை மேற்கொண்டனர்.


கோ.நடேசய்யர் ஒரு பிராமணன், தொழிலாளர் வர்க்கத்தைச் சாராதவர், தன்னைத்தானே தலைமையாக அறிவித்துக் கொண்டவர், தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்திற்குமிடையே இருக்கின்ற உறவினை சீர்குலைப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுபவர் என்றெல்லாம் குற்றஞ் சுமத்தியது. இவ்வாறு தன்மீது சுமத்தப்பட்ட அனைத்து அவதூறுகளுக்கும் முகங்கொடுத்த கோ.நடேசய்யர் தன் நோக்கத்திலிருந்தும், கொள்கையிலிருந்தும் கிஞ்சித்தும் விலகாது விடாப்பிடியாக இருந்தார்.
மலையகத் தொழிற்சங்க வரலாற்றில் நடேசய்யரால் தொடங்கப்பட்ட அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் செயற்பாடுகள் இங்கே குறிப்பிடத்தக்கவை. விசேடமாக மதுப்பழக்கம், சூதாட்டம், கடன்படல் போன்ற நடவடிக்கைகளில் தொழிலாளர்கள் ஈடுபடுவதைத் தடுத்தல் மறுபுறத்தில் சிக்கனம், சுயசேமிப்பு, சகோதரத்துவம் ஆகியவற்றை ஊக்குவித்தல் போன்ற ஆரோக்கியமான செயற்பாடுகளை முன்னெடுப்பதன் மூலம் தொழிலாளர்களை விழிப்படையச் செய்வதையே பிரதான நோக்கமாகக் கொண்டிருந்தது.

(மிகுதி அடுத்த பக்கம்)

### அடுத்து வரும் தலைப்புக்கள்

தமிழில் தரிப்புக் குறிகளின் பயன்பாடு
06-10-2011 | கலந்துரையாடல்

சுயநிர்ணய உரிமை
13-10-2011 | இ. தம்பையா



9/23

பாப்லோ நெருடா, (Pablo Neruda, ஜூலை 12, 1904 - செப்டம்பர் 23, 1973) என்ற புனைப்பெயர் கொண்ட ரிக்கார்டோ இலீசர் நெப்டாலி ரீயஸ் பொசால்தோ ( Ricardo Eliecer Neftalí Reyes Basualto), சிலி நாட்டில் பிறந்தவர். இவர் இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த கவிஞர்களில் ஒருவர். கவிஞராகவும், சமூக உணர்வு கொண்ட போராளியாகவும், மார்க்சிய தத்துவங்களில் ஈடுபாடு கொண்டவராகவும் திகழ்ந்தவர். 1920 ஆம் ஆண்டு கவிதை எழுதுவதற்காக, செக்கோஸ்லாவாகியா எழுத்தாளரான ஜோன் நெருடாவின் பெயரால் உந்தப்பட்டு, தன் பெயரையும் பாப்லோ நெருடா என்ற புனைப்பெயரினை ஏற்றுக்கொண்டார். பாப்லோ என்பது ஸ்பானிஷ் மொழியில் பால் (Paul) என்பதன் வடிவமாகும்.

"இளம் பூச்சியைப் பிடிப்பதற்கு
நச்சு வலை விரிக்கும்
சிலந்தி நூல்களை
நான் வெறுக்கிறேன்
புத்தகமே
என்னை விட்டு விடு

உன் நூலகத்திற்கு நீ திரும்பிப்போ
நான் தெருவில் இறங்கப் போகிறேன்
வாழ்க்கையை நான்
வாழ்க்கையிலிருந்தே கற்றுக் கொண்டேன்
காதலை ஒரு முத்தத்திலிருந்து கற்றேன்"

### சமூக விஞ்ஞான கற்கை வட்டம்

சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 5.30 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.

அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.

நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்தெடுக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.

சமூக விஞ்ஞான கற்கை வட்டம்
தேசிய கலை இலக்கியப் பேரவை,
571/15. காலி வீதி,
வெள்ளவத்தை
0772307807
0772260165

Facebook group :
facebook.com/groups/ssscircle/

வலைத்தளம் :
circle.thulaa.net

செய்திமடல் - 20 | 06-10-2011

## மலையகத் தொழிற்சங்கங்களின் இன்றைய நிலையும் மாற்றுத் தொழிற்சங்கம் ஒன்றின் தேவையும்

முன்பக்கத் தொடர்ச்சி..

பேச்சாற்றலும் ஆங்கிலப் புலமையும் கொண்டிருந்த நடேசய்யர் மிகவும் சக்திவாய்ந்த தோட்ட உரிமையாளர்களுக்கு பல வழிகளிலும் சவாலாக விளங்கியவராவார். தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிரான தோட்ட உரிமையாளர்களின் அராஜகங்களை எதிர்த்துக் குரல் கொடுக்கின்ற தைரியத்தை தொழிலாளர்கள் கொண்டிருக்கவில்லை. ஆனால் தொழிலாளர் வர்க்கத்தைச் சாராத இவர் தோட்ட உரிமையாளர்களின் தொழிலாளர் விரோத செயற்பாடுகளை எதிர்த்து நின்றார்.

அந்த வரலாற்றின் தொடர்ச்சியாக மலையகத்தில் இயக்கமுற்ற போர்க்குணங்கொண்டு இடதுசாரி தொழிற்சங்கங்களின் பங்களிப்புகளை குறைத்து மதிப்பிட முடியாது. குறிப்பாக லங்கா சமசமாஜக் கட்சியின் லங்கா தோட்ட தொழிலாளர் யூனியன் செங்கொடிச் சங்க யூனியன் மற்றும் வெள்ளையனின் தலைமையிலான தொழிற்சங்கம் போன்றன குறிப்பிடத்தக்க வகையில் தொழிலாளர் நலனில் அக்கறை காட்டிய அமைப்புகளாக இருந்து வந்திருக்கின்றன.

1939ம் ஆண்டு நேருவின் இலங்கை வருகையோடு இலங்கை இந்திய காங்கிரஸ் தொடக்கப்பட்ட போதிலும் அத்தொழிற்சங்கமோ தொழிலாளர் அங்கத்துவம் பற்றிய ஆழமான சிந்தனையைக் கொண்டிருக்கவில்லை. எது எப்படியோ 1956ம் ஆண்டு இலங்கை இந்திய காங்கிரஸ் தொண்டமான், அஸீஸ் ஆகியோரின் தனித்தனி தலைமைகளில் இரண்டாக உடைவெடுத்தது. இங்கு முற்றுமுழுதான அரசியல் இலாபங்கருதி தொழிற்சங்கமொன்று இயங்கத் தொடங்கிய காலமும் இதுவே. அன்று தொடங்கி இன்று வரையாக மலையகத் தொழிற்சங்க வரலாற்றில் முதலாளித்துவ நலன் சார்ந்த, மிகவும் பிற்போக்கான, நேர்மையான தொழிற்சங்கப் போராட்டங்களைக் காட்டிக்கொடுக்கின்ற ஒரு தொழிற்சங்கமாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸைக் குறிப்பிடலாம்.

பின் வந்த காலங்களில் கருத்து முரண்பாடுகள் காரணமாக இ.தொ.கா.விலிருந்து அவ்வப்போது சில முக்கிய உறுப்பினர்கள் வெளியேறி அவர்கள் பங்கிற்கு தொழிற்சங்கங்களைத் தொடங்கி இந்த உழைக்கும் வர்க்கத்தை ஏமாற்றும் நடவடிக்கைகளை வெற்றிகரமாக முன்னெடுத்துவருகின்றனர். ஆரம்பகாலத்தில் தொழிலாளர் நலன்களை முன்னிலைபடுத்தி இயங்கிய தொழிற்சங்கங்களோடு இன்றைய தொழிற்சங்கங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது முற்று முழுதாக அதன் எதிர்ப்பக்கத்திலேயே இருக்கின்றன என்பதில் இருவேறு கருத்துக்கள் இருக்கமுடியாது. காரணம் தொழிலாளர்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்தாது அவர்களை தொழிற்சங்க ரீதியாக பிரித்தாளும் தந்திரங்களை கையாளுதல், தொழிலாளர்களை ஏமாற்றுதல், உழைக்கும் வர்க்க தொழிலாளர்களின் ஒற்றுமையை குலைத்தல், மதுப்பழக்கத்தை ஊக்குவித்தல் மற்றும் ஆளும் வர்க்கத்தின் நிகழ்ச்சி நிரலுக்கமைய மலையகத் தொழிலாளர்களின் இருப்பையும் கலாசார பண்பாட்டையும் சிதைக்கின்ற முகவர்களாகவும் செயற்படுகின்றனர். குறிப்பாக தேர்தல் காலங்களில் தனித்துவம் என்று கூறிக்கொண்டு மண் காக்க வந்த மைந்தர்களாக இருக்கட்டும், புதுயுகம் படைக்கவென்று புறப்பட்ட இளைய தலைவர்களாக இருக்கட்டும், இறக்குமதி செய்யப்பட்ட இளைய தளபதிகளாக இருக்கட்டும் யாவருமே சாராயமென்ற சரக்கை தோட்டங்களுக்குள் இறக்கித்தான் சாதனைகள் பல புரிந்தார்கள். அந்த வகையில் எல்லாமே ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் என்ற கருத்து இவர்களுக்கு நூற்றுக்கு நூறு பொருந்தும்.

இலங்கையில் பெருந்தோட்டங்களின் வளர்ச்சியில் தொழிலாளர்களின் பங்கு இன்றியமையாத ஒன்றாகும். எண்ணிக்கையில் பெரும்பான்மையாக இருக்கின்ற இவர்கள் மிகவும் சுரண்டலுக்கு ஆளாகுவது தொழிற்சங்க தலைமைகள் என்று சொல்லிக் கொள்கின்ற ஆளும் வர்க்க அடிவருடிகளாலேயே. ஆயின், தொழிலாளர் வர்க்கத்தின் புதிய தலைமுறை இவ்வாறான கண்ணாமூச்சி கதைகளுக்கெல்லாம் காதுகொடுக்காது பிழைக்கும் வழியைத் தேடவேண்டும் என்பது காலத்தின் தேவையாக இருக்கிறது.

தொழிற்சங்கம் என்பது என்ன? அதன் கடமைகள் யாவை? தொழிற்சங்கம் என்பது முதலாளிகளின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக தொடங்கப்படுவதல்ல. அது தொழிலாளர்களின் நலனுக்காக தொடங்கப்படும் ஓர் தொழிலாளர் அமைப்பாகும். அடிப்படையில் தொழிலாளர்களின் நலன்களை முன்னெடுக்கின்ற ஓர் அமைப்பாகவும் தொழிலாளர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கு தொழிலாளர்களை ஒன்றிணைக்கின்ற அமைப்பாகவும் இருக்கவேண்டியது அவசியம்.

காலத்திற்கு காலம் இப்படியெல்லாம் கதை சொல்லிக்கொண்டு தொடங்கப்பட்ட எத்தனையோ புதிய தொழிற்சங்கங்கள் சிறுகால நகர்வில் தம்மையும் தாம் முன்னெடுக்க முனைந்த அமைப்பின் கொள்கைகளையும் மறந்து வழமையான பிற்போக்கு நடவடிக்கைகளில் ஈடுபட்ட வரலாறுகளை நாம் மறந்துவிடக்கூடாது. அதற்கு அந்த அமைப்பின் முக்கியஸ்தர்கள் கூறும் கதைகள் வேடிக்கையானது. அதாவது மக்களை தாம் ஏமாற்றாது நேர்மையாக செயற்படுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டதாகவும் ஆனாலும் மக்களே தம்மை அடையாளம் கண்டு கொள்ளாது ஏனைய ஏமாற்று தொழிற்சங்கங்களில் இணைந்துகொண்டு தம்மை பலவீனப்படுத்துவதாகவும் குற்றம் சுமத்துகின்றனர். இந்தக் கூற்றில் எத்தனை சதவீதம் உண்மை இருக்கின்றது என்பது தெரிந்தவர்களுக்கு தெரியும். எனினும் ஒருவரை ஒருவர் குற்றஞ் சுமத்துவதை விடுத்து, எல்லாவிதமான சவால்களையும் எதிர்கொண்டு அந்த உழைக்கும் வர்க்கத்தினரின் நலனுக்காய் இயங்கக்கூடிய ஒரு மாற்றுத் தொழிற்சங்கத்தின் தேவை இன்றைய சூழலில் இன்றியமையாததாகிறது. எனவே மாற்றுத் தொழிற்சங்கமொன்று உருவாக்கம்பெற்று பொருளாதாரத்தை தீர்மானிப்பதில் தொழிலாளரின் வகிபங்கு என்ன என்பதை உணர்ந்து தோட்ட உரிமையாளர்களினதும் முதலாளிமார் சம்மேளனத்தினதும் அராஜகங்களை தோற்கடித்து இந்த அப்பாவி கூட்டத்தின் விடுதலைக்காய் கடுமையாக உழைக்க வேண்டும் என்பது காலத்தின் தேவையாக இருக்கிறது.

எனினும் தம் வர்க்க நலன்களை முன்னிலைப்படுத்தி நேர்மையாக செயலாற்றக்கூடிய தொழிற்சங்கங்களை அடையாளம் கண்டு அவர்களோடு இணைந்து தமது உரிமைகளை வென்றெடுக்க வேண்டிய தேவையும் பொறுப்பும் ஒவ்வொரு தொழிலாளியின் முன்னேயும் விரிந்து கிடக்கிறது. சிறு குழுக்களாக பிரிவது சிறு,சிறு வருமதிகளுக்காகவும் சுயலாபத்திற்காகவும் விலைபோவது போன்ற செயற்பாடுகளை முற்றிலும் தவிர்த்து மாற்றுத் தொழிற்சங்கத்திற்கு ஒத்துழைப்பை நல்குவது ஒட்டுமொத்த தொழிலாளர் வர்க்கத்திற்கு பெரிதும் நன்மை பயக்கும்.

## தமிழில் தரிப்புக்குறிகளின் பயன்பாடு

06-10-2011 அன்று உரையாடப்படவுள்ள விடயப்பரப்பு

சி. சிவசேகரம் எழுதிய, "தமிழிற் தரிப்புக் குறிகளின் பயன்பாடு" என்ற நூலினை முன்வைத்து, தரிப்புக்குறிகளை எப்படி மொழியில் பயன்படுத்துவது என்பது பற்றிய உரையாடலாக இது அமையும்.

* பழந்தமிழில் தரிப்புக்குறிகள் இருக்கவில்லை. இன்றும் தரிப்புக்குறிகளைப் பயன்படுத்தாமல் தமிழில் தெளிவாக எழுத முடியும். ஆயினும் தரிப்புக்குறிகளைப் பயன்படுத்தும் போது எழுதப்படும் விடயத்தைத் தெளிவாகப் புரியவைக்க முடியும்.

* நவீனத்துவம் தமிழில் ஏற்படுத்திய பல்வேறு மாற்றங்களைப்போலவே தரிப்புக்குறிப் பயன்பாடும் ஆங்கிலம் வாயிலாகத் தமிழுக்குள் வந்து சேர்ந்த ஒன்றாகும்.

* சமகால எழுத்தாக்கங்களில் தரிப்புக்குறிகளைப் பலரும் தவறாகப் பயன்படுத்துவதால் விளக்கக்குறைவும் பொருள் மயக்கமும் ஏற்பட்டுவிடுகிறது.

* புள்ளி [.], வினாக்குறி [?], வியப்புக்குறி [!], குறுந்தரிப்பு [,], நெடுந்தரிப்பு [;], விளக்கக்குறி [:], மேற்கோட்குறி [" "], இணைத்தற்கோடு [-], சாய்கோடு [/], தனிமேற்கோட்குறி ['], அழுத்தம், இடைவெளிகள் போன்றன அடிக்கடிப்பயன்படுத்தப்படும் தரிப்புக்குறிகளாகும்.

* இவ்வொவ்வொரு தரிப்புக்குறியும் மொழியில் பயன்படுத்தப்படும் முறைக்கென நடைமுறைகள் உண்டு.

* தரிப்புக்குறிகளுக்கென இறுதிப்படுத்தப்பட்ட இலக்கணமெதுவும் இல்லை என்றபோதும், முறையாகத் தரிப்புக்குறிகளைப் பயன்படுத்துமிடத்து எழுதப்படும் விடயங்கள் மயக்கமற்றவையாக, விளக்கம் கூடியவையாக அமையும்.

சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின்
கவிதைகளுக்கான நிகழ்வு

"பாடிப்பறை"



பாடிப்பறை

இம்முறை, பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்
சிறப்பு நிகழ்ச்சியாக..
11 - 10 - 2011 (செவ்வாய்க்கிழமை) காலை
10 மணிக்கு
தேசிய கலை இலக்கியப் பேரவை கைலாசபதி
கேட்போர் கூடத்தில்..

சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் செய்தி மடல்களைப் படியெடுக்கவும் அச்சிட்டுப் பகிரவும் அனைவருக்கும் உரிமையுண்டு. இதில் வெளிவரும் ஆக்கங்களை மூலத்தைக் குறிப்பிட்டு எங்கும் பிரசுரிக்கலாம்.